ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 13.07.2017 |

## 2017 யூலை 12இல் கொழும்பில் இடம்பெற்ற சார்க்நிதியிடல் குழுக் கூட்டம் மற்றும் சார்க்நிதியிடல் ஆளுநர்களின் கருத்தரங்கு

இலங்கை மத்திய வங்கி 2017 யூலை 12ஆம் திகதி கொழும்பில் 34ஆவது சார்க்நிதியிடல் குழுக் கூட்டம் மற்றும் சார்க்நிதியிடல் ஆளுநர்களின் கருத்தரங்கை நடாத்தியிருந்தது. 34ஆவது சார்க்நிதியிடல் குழுக் கூட்டத்தில் ஆளுநர்கள், நிதிச் செயலாளர்கள், மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சிலிருந்தான ஏனைய பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

சார்க்நிதியிடல் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து, ‘‘உலகளாவிய நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் சார்க் பிராந்தியத்திற்கான சவால்கள் மற்றும் இத்தகைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான சாத்தியமான கொள்கை வழிமுறைகள்’’ என்ற தொனிப்பொருளில் இலங்கை மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்டர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் சார்க்நிதியிடலின் ஆளுநர்களின் கருத்தரங்கு இடம்பெற்றது. கருத்தரங்கில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களினால் பிரதான உரை வழங்கப்பட்டது. ஒவ்வொரு சார்க் நாடுகளும் உலகளாவிய நிச்சயமற்றதன்மையின் காரணமாக அந்நாடுகளின் மீதான தாக்கம் மற்றும் இத்தகைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான சாத்தியமான கொள்கை வழிமுறைகளை அடையாளப்படுத்தி சமர்ப்பிப்பொன்றை வழங்கியிருந்தன. ‘‘சார்க் பிராந்தியத்தின் நிதியியல் உள்ளடக்கம்’’ என்பதன் மீதான சார்க்நிதியிடலின் ஒன்றிணைந்த ஆராய்ச்சிக் கற்கையின் ஆரம்பப் பெறுபேறுகளும் இக்கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2002 யூன் மாதத்தில் காத்மண்டுவில் இடம்பெற்ற அமைச்சர்கள் சபையின் இருபத்திரண்டாவது அமர்வில் ஒப்புதலளிக்கப்பட்டதும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் மற்றும் சார்க் அங்கத்துவ நாடுகளின் நிதிச் செயலாளர்கள் ஆகியோரின் மட்டத்திலான நிரந்தரமானதொரு நிறுவனமே சார்க்நிதியிடலாகும். பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் மீதான நெருங்கிய தொடர்புத்தன்மையை உருவாக்கும் நோக்கில் சார்க் அங்கத்துவ நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சர்கள் என்பவற்றிற்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தல் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளல் என்பனவே சார்க்நிதியிடலின்

குறிக்கோளாகும். சார்க்நிதியிடலின் கூட்டங்கள் ஆண்டொன்றிற்குக் குறைந்தது இரண்டு தடவைகள் இடம்பெறுவதுண்டு. சார்க்நிதியிடலானது சார்க்நிதி அமைச்சர்களினூடாக அமைச்சர்களின் சார்க் சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கின்றது.

